பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 09 2025 SUNDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சூரியசக்தி மின்உற்பத்தியில் உலகின் ஐந்து முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், மக்களின் வரிச் சுமையை பெருமளவு குறைக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டியை தலைமையிடமாக கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Minakshi தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

சூரியசக்தி மின்உற்பத்தியில் உலகின் ஐந்து முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம், Golaghat-ல் உயிரி எத்தனால் உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்தியா வேகமாக வளர்ந்து வரும் நாடாக உள்ளதால், மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருட்களின் தேவையும் அதிகரித்து வருவதாக கூறினார்.

எரிசக்தி தேவைக்காக கடந்த காலங்களில் வெளிநாடுகளை பெருமளவு சார்ந்திருந்த நிலை, தற்போது மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எரிசக்தி உற்பத்தியில் சுயசார்பு அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், மக்களின் வரிச் சுமையை பெருமளவு குறைக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று தொழில் வர்த்தக சங்க நிகழ்ச்சியில் பேசிய அவர், முன்பு நான்கு அடுக்குகளாக இருந்த சரக்கு மற்றும் சேவை வரி, தற்போது இரண்டு அடுக்குகளாக குறைக்கப்பட்டு உள்ளதாகவும் பெருமளவிலான பொருட்கள், குறைந்தபட்ச வரிவிதிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

(சவுண்ட் பைட் – நிர்மலா 34 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சிக்கு மகளிரின் சமஅளவிலான பங்கேற்பு அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

ஆந்திர மாநிலம், திருப்பதியில் மகளிருக்கு அதிகாரமளித்தல் குறித்த நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை குழுக்களின் இரண்டு நாள் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், புதிய நாடாளுமன்ற கட்டடம் திறக்கப்பட்ட பிறகு, முதல் மசோதாவாக மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா நிறைவேற்றப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களின் பலனாக, சுயஉதவி குழுக்கள் முதல் விண்வெளி ஆராய்ச்சி வரை பல்வேறு துறைகளிலும் மகளிர் தற்போது சாதனை படைத்து வருவதாக திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனின் செயலாளராக, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி திரு. Amit Khare நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது.

தகவல் ஒலிபரப்புத்துறை முன்னாள் செயலாளரான திரு. அமித் கரே, மூன்றாண்டுகளுக்கு இப்பதவியை வகிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டியை தலைமையிடமாக கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அம்மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து பேசிய அவர், தளி ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து, புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஓசூர் நகரில் புதிய ரயில்வே மேம்பாலம் கட்டப்படும், இம்மாவட்டத்தின் வழியாக செல்லும் இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் வகையில், புதிய சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.

திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் பெருமளவு நிறைவேற்றப்பட்டுள்ளதாக திரு. மு.க.ஸ்டாலின் கூறினார்.

>>>>><<<<<

தமிழக அரசின் மனநல ஆலோசனை வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

உலக தற்கொலை தடுப்பு வாரத்தை ஒட்டி, சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்கொலைகளை தடுக்க தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மனம் என்ற பெயரில் மருத்துவ சேவை வழங்கப்படுவதுடன், விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

குறிப்பாக, பொதுத்தேர்வுகளில் தேர்ச்சியடைய தவறிய மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 60 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தருமபுரியில் கேரள சமாஜம் சார்பில் நடைபெற்ற ஓணம் திருவிழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் பணியை, ஆட்சியர் திருமதி. அழகு மீனா ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதரவற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான முதியோர் இல்லங்களை நடத்த விரும்பும் தொண்டு நிறுவனங்கள், சமூகநலத்துறையில் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

சிவகங்கை மாவட்டத்தில் அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் Gr.II தேர்வு மாதிரி தேர்வுக்கான பாடக் குறிப்புகளை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அருகே மருத்துவம் படிக்காமல் கிளினிக் நடத்தி வந்த போலி மருத்துவர் கைது செய்யப்பட்டார்.

>>>>><<<<<

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகே, வனப்பகுதியில் அனுமதியின்றி சாலை அமைத்த ஆந்திராவைச் சேர்ந்த கல்குவாரி மேலாளருக்கு வனத்துறை ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைப் பகுதியில் முதலை கடித்து கல்லூரி மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Minakshi தங்கப்பதக்கம் வென்றார்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 4-1 என்ற புள்ளிக்கணக்கில் கஸகஸ்தானின் Nazym Kyzaibay-வை வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி. ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.

>>>>><<<<<

இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 282 ரன் எடுத்தால் வெற்றி இலக்குடன் பேட் செய்து வரும் ஆஸ்திரேலியா சற்றுமுன்வரை 12 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 75 ரன் எடுத்துள்ளது.

சண்டிகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 281 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Pratika Rawal 64 ரன் எடுத்தார்.

>>>>><<<<<

துனிஷியாவில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manas Dhamne பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 6-2, 6-0 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Cesar-ஐ வென்றார்.

>>>>><<<<<

ஹாங்காங் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென்னும், இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

>>>>><<<<<

சீனாவின் Ningbo-வில் நடைபெற்று வரும் சர்வதேச துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியின் 10 மீட்டர் பிரிவில் இந்தியாவின் Meghana Sajjanar வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

மலேசியாவில் நடைபெற்று வரும் 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர் கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா - உஸ்பெகிஸ்தானை வென்றது.

>>>>><<<<<